# திராவிடத்தின் பிதாமகரே! தமிழ் இனத்தின் பாதுகாவலரே!



திராவிடம் பெற்றெடுத்த தவப்புதல்வரே !
தங்கத்தமிழ்நாடு தேர்ந்தெடுத்த நிரந்தர முதல்வரே !
தன்மானத்தமிழினம் கண்டெடுத்த சரித்திர நாயகரே !
ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை காவலரே !
சிறுபான்மையினரின் பாதுகாவலரே !
உலகத்தமிழர்களின் தாயுமானவரே !
உழைப்பாளிகளின் உறவானவரே !

உம் காலடி பட்ட பின் தான்
கீழடி புகழ் வெளிச்சம் பெற்றது !
நீர் அரியணை ஏறிய பின் தான்
தமிழர் வாழ்வு புது ஏற்றம் கண்டது !

மார்ச் 1 உமக்கு பிறந்தநாளாம் !
உம் தலைமையில்
செயல்பட்டு வரும்
கழக உடன்பிறப்புகளுக்கதுவே
ஆகச்சிறந்த பொன்னாளாம் !
உலகமே அதிசயிக்கும்
உம் அரசாட்சி !
நம் கழகமே
தமிழ்நாட்டின் மனசாட்சி !

மாணவ செல்வங்களுக்கு அளித்திட்டீர் ஆயிரம் திட்டம் !
அது பொறுக்காமல்
பொங்கி ஆர்ப்பரிகிறது
ஆரியக்கூட்டம் !
படிக்கும் பிள்ளைகள்
சத்தாய் வளர,
முத்தாய் அளித்திட்டீர்
முதல்வர் காலை உணவுத்திட்டம் !
நாளைய தலைமுறையின் படிக்கும் ஆர்வத்தை தூண்ட
நான் முதல்வன் திட்டம் !
தாயுமானவன் திட்டம்!
தமிழ்ப்புதல்வன் திட்டம்!
ஐ.நா வே வியந்து போற்றும்
இல்லம் தேடி கல்வித்திட்டம்!
பெண்கல்வியை ஊக்குவிக்கும்
புதுமைப்பெண் திட்டம்!

அப்பப்பா ! !

எத்தனை,எத்தனை திட்டங்கள்
உம் சீரிய சிந்தனையால் !

அந்த நன்றிப்பெருக்கோடு
மாணவ சமுதாயம் உளமார
உமை அழைக்கிறது
“அப்பா” என்று,
தப்பாக கூட நல்லது
ஏதும் செய்திடாத,
அடாத கூட்டமொன்று
“அப்பா” என்றழைப்பது கேட்டு பித்துப்பிடித்து அலையுதங்கே !

தேசியக்கல்வி கொள்கையென்று
கொல்லைப்புறவழியில் குலக்கல்வியை புகுத்த நினைத்த
பாசிச கும்பல்,
கல்வியை வளர்க்க திட்டம் தீட்டாமல்,
இந்தியை வளர்க்க திட்டம் தீட்டி
இன்று,மும்மொழி கொள்கையை ஏற்றாலே கல்விநிதி
என அச்சுறுத்த,
சுயமரியாதை சிங்கமென
வெகுண்டெழுந்த உம் தீரம்
கண்டு சிலிர்த்து போனது
தமிழ் இனம் !
வாயடைத்து போனது இந்துத்துவம் !

இன்னும் 1000 ஆண்டுகள் கடந்தாலும்,
திராவிட மாடலின் பெயர் சொல்லும்
நீங்கள் அளித்துள்ள
ஆக்கபூர்வ திட்டங்கள் !



**முனைவர் பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு
மாவட்ட தி.மு.க.

திராவிட பேரரசரே !
இன்னுமொரு மொழிப்போருக்கு
நாங்கள் தயாரென
உம் பின்னால்
அணி திரண்டுள்ளது
தமிழ் இனம் !

ஏனெனில் நீரே
எம் சமூகநீதி போராளி !
ஆரிய பாசிசத்திற்கு எதிராளி !
எல்லாரும்,எல்லாமும் பெற வேண்டும்,
தமிழர் வாழ்வு மலர வேண்டும் !
அதுவே நின் குறிக்கோளாகும் !
2026 லிலும் நீரே தமிழ்நாட்டை ஆள வேண்டும் !
நாட்டு மக்கள் வளம் பெற வேண்டும் !
நீவிர் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும் !
வாழ்த்துகிறேன் ! வணங்குகிறேன் !



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக கள்ளக்குறிச்சி தெற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், தியாகதுருகம் பிரதான சாலை, கள்ளக்குறிச்சி. |
| | மாலை 4.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக அலுவலகம், ராஜா நகர், கள்ளக்குறிச்சி. |

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 26-02-2025



தமிழர்களுக்கு மொழியுணர்வு பற்றி

# ஆளுநர் ஆர்.என்.ரவி பாடம் எடுக்க வேண்டாம்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, மார்ச் 1 -

தமிழ் - தமிழ்நாடு தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம் என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெற்றிருக்கும் வளர்ச்சியை பொறுக்க முடியாமல் தமிழ்நாட்டின் மீது வெறுப்பை உமிழ்வதையே தனது கடமையெனக் கருதி செயலாற்றி வருகிறார் ஆளுநர் ரவி.

தனது அரசியலமைப்பு கடமைகளை மறந்து ஆதாரமற்ற அவதூறுகளை வைத்து தமிழ்நாட்டை இழிவுப்படுத்தும் அரசியலை செய்வதற்காகவே ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆர்.என்.ரவியை ஆளுநராக வைத்திருக்கிறது.

தனது சமூக வலைதளக் கணக்கை இதற்காகவே பிரதானமாக பயன்படுத்தி வரும் ஆளுநர் ரவி தனது இன்றையப் பதிவில் “இந்தப் பகுதி, மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது, ஆனாலும் இது புறக்கணிக்கப்பட்டு பின்தங்கியுள்ளது போன்ற உணர்வைத் தருகிறது. தொழில்மயமாக்கலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், இங்குள்ள மக்கள் வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டவர்களாக உணர்கிறார்கள்” எனக் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு எதில் பின் தங்கியுள்ளது என ஆளுநர் ரவியால் சொல்ல முடியுமா?

கல்வியில், மருத்துவத்தில், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி இந்திய மாநிலங்கள் எதனோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்களே சொல்லும், அதையெல்லாம் ஆளுநர் ரவி படித்தால்தானே? படித்தாலும் தமிழ்நாட்டின் மீது வெறுப்பேறிய கண்களுக்கு அவையெல்லாம் எப்படித் தெரியும்?

தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சி இருமொழிக் கொள்கையினால் சாதித்தவை, தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தியை திணிக்கலாம் அதற்கு புதிய கல்விக் கொள்கையை ஒரு வழியாக வைத்து உள்நுழையலாம் எனும் ஆதிக்கவாதிகளின் சதியை அறியாதவர்களா தமிழர்கள்?

தமிழ் - தமிழ்நாடு - தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம்.

சனாதனத்தையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டில் காலூன்றச் செய்திட குட்டிக்கரணம் போடும் ஆளுநரின் நடவடிக்கைகள் தமிழ் மண்ணில் வேறூன்றவில்லை. அப்படித்தான் மும்மொழி கொள்கையும் மூக்கறுபட்டு நிற்க போகிறது.

மொழித் தேர்வு எது? மொழித் திணிப்பு எது? என்பது எங்களுக்கு தெரியும், இந்த நாடகங்கள் எல்லாம் இங்கே எடுபடாது.

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி மக்கள் பயனடையும் வகையில் பரவை எம்.எஸ்.மகாலில் நடைபெற்ற அரசின் நலத்திட்ட சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து பொதுமக்களிடம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்களை பெற்றார். உடன் கூடுதல் ஆட்சியர் மோனிகா ரானா, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் ராகவேந்திரன், கோட்டாட்சியர் ஷாலினி, மண்டல தலைவர்கள் சரவண புவனேஸ்வரி, வாசுகி சசிக்குமார், பாண்டிச்செல்வி, சுவிதா விமல், கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஜி.பி.ராஜா, சின்னம்மாள், மூவேந்திரன், அன்பழகன், சுதன், மதி வெங்கடேஷ், தவமணி, காவேரி, சசிக்குமார், மருதுபாண்டியன், ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி, மனோகரன், அன்புச்செல்வன், அய்யப்பன், துரை சரவணன், சிறைச்செல்வன், மீரா ஜான், அமுதா முத்துப்பேற்கினியன், கருணாநிதி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதல்வர் பிறந்த நாள் விழா!

# தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் விளையாட்டுப் போட்டிகள் - நல உதவிகள் - பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு !



தூத்துக்குடி, மார்ச் 1-

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் உரிமைகளைக் காக்கவும் தொடர்ந்து குரல் கொடுத்து, தமிழர் தம் வாழ்வு சிறக்க, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி இந்தியாவுக்கே முன் மாதிரியாக திராவிட மாடல் பொற்கால ஆட்சி புரிந்து வரும் தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்டம் முழுவதும் கழக அமைப்புகள் மற்றும் சார்பு அணிகள் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், விளையாட்டுப் போட்டிகள், கழக சாதனை விளக்க சிறப்பு தெரு முனை பிரச்சார கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் நடத்தியும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட இருப்பதாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இன்று காலை தூத்துக்குடி மாநகர தி.மு.க சார்பில் பழைய பேருந்து நிலையம் அருகே காலை 9 மணிக்கு கேக் வெட்டுதல் நிகழ்ச்சியும், அதைத்தொடர்ந்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டுகள் மற்றும் கிளைக்கழங்கள் தோறும் கழகத்தின் இரு வண்ணக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி களும், மேலும் தூத்துக்குடி மாநகரம் முழுவதும் இருக்கின்ற முதியோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அறுசுவை மதிய உணவுகள் வழங்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. மேலும் அன்றைய தினம் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறக்கின்ற குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் அணிவித்தல் நிகழ்வும், மாலை 5 மணிக்கு தூத்துக்குடி மாநகரம் 60வது வார்டு மற்றும் 6 மணிக்கு 11 வது வார்டு பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் நடைபெறும். நாளை மார்ச் 2ம் தேதி காலை 11 மணிக்கு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் நிகழ்வும், அதே நாளில் தூத்துக்குடி - திரேஸ்புரம் பகுதியில் உள்ள ஆக்சிலியம் பள்ளி வளாகத்தில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமும் நடைபெற உள்ளது. அன்று மாலை 5 மணிக்கு தூத்துக்குடி மாநகரம் 40வது வார்டு பகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறும். மார்ச் 4ம் தேதி மாலை 5 மணிக்கு தூத்துக்குடி மாநகரம் 6 மற்றும் 7வது வார்டு பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களும் நடைபெற உள்ளன.

மேலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் கைப்பந்து, கூடைப்பந்து மற்றும் கிரிக்கெட் போட்டிகளும், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் மாபெரும் மின்னொளி கபாடி போட்டிகளும், மாட்டுவண்டி எல்கைப் பந்தயமும், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் ஹாக்கி போட்டியும் நடத்தப்பட்டு பங்கேற்பவர்களுக்கு ஆறுதல் பரிசுகளும், வெற்றி வெறுவோருக்கு ரொக்கப்பரிசு, கோப்பை உள்ளிட்ட சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

இது தவிர, தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் என அனைத்து கழக அமைப்புகளிலும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி கழக முன்னணிப் பேச்சாளர்கள் உரையாற்றும் சிறப்பு தெரு முனைப் பிரச்சாரக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற உள்ளன.

என்றும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


## முரசொலி உரிமை விளக்கம்
## படிவம் – 4 விதி – 8

| | | |
|---|---|---|
| பிரசுரிக்கும் இடம் | – | தினகரன் அச்சகம் 2/2, மேலூர் மெயின்ரோடு, உத்தங்குடி, மதுரை – 625 107. |
| பிரசுர முறை | – | நாளிதழ் |
| வெளியிடுபவர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| அச்சிடுபவர் | – | D. கார்த்திகேயன் |
| ஆசிரியர் பெயர் | – | கார்த்திகேயன் சண்முகசுந்தரம் |
| இனம் | – | இந்தியன் |
| முகவரி | – | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |
| உரிமையாளர் பெயர் | – | முரசொலி அறக்கட்டளை |
| மற்றும் முகவரி | | 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை, சென்னை – 600 034. |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் நான்அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.

மதுரை
01.03.2025

கார்த்திகேயன் சண்முகசுந்தரம்
(ஒப்பம்)
வெளியிடுபவர்